4. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் 1989–90 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 5 முதல் 10 வரையிலான அறிக்கைகளை இம் மாமன்றத்திற்கு அளிக்கிறேன்.

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்— விவாதம்—தொடர்ச்சி.

திரு. எஸ். எஸ். தென்னரசு: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது அரசை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதி அளித்ததற்காக நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நேற்றைய தினம், ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற விவாதத்தில் மிக முக்கியமான கருத்துக்களில் முதலமைச்சர் அவர்கள் அரிய விளக்கங்களை அளித்து இருக்கின்றார்கள். ஆகையினால் ஆளுநர் உரையின் மீது அவைகளைப்பற்றி திரும்பச் சொல்வது அவ்வளவு உசிதமாக இருக்காது என்பதால் சில கருத்துக்களை மட்டும் நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசும், அதன் தலைவரும், தாழ்த்தப் பட்டோருக்கும், பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு சம்பந்த மாக நேற்று நடைபெற்ற விவாதத்தின்போது யாருடைய கருத்திலேயும் கீறல் விழுந்துவிடக் கூடாது என்பதிலே எச்சரிக் கையாக இருந்து அதை ஒருமனதாக நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டது அனைவருக்கும் பெருத்த மகிழ்ச்சியைத் தந்தது. அந்த அடிப்படையிலேயே ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதையொட்டி நேற்றைய ஆளுநர் உரையின்போது மண்டல் கமிஷன் பற்றியும் நம்முடைய நண்பர்கள் அரிய கருத்துக்களை வழங்கி இருக்கின்றார்கள். தாழ்த்தப் பட்டோருக்கு இட ஒதுக்கீடு அளிக்கின்ற அந்த முன்வடிவிற்கு ஆதரவு அளிப்பதும், மண்டல் கமிஷனை ஆதரிப்பதும், ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையது என்பதை நம் முடைய மக்கள் மறந்து விடக்கூடாது. எப்படி சிலப்பதிகாரம் இல்லாமல் மணிமேகலை இல்லையோ அதைப்போலத்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் உள்ள உறவு என்பதை நாடு நன்றாக அறிந்திருக்கிறது. மண்டல் கமிஷன் என்கின்ற விவரத்தைப் பற்றி அரசியல் வாதிகள் மட்டுமே நன்கு அறிவார்களே தவிர பொதுமக்கள் பெரும்பகுதியினர் அதைப்பற்றி இன்றும் சரியாக புரிந்து கொள்ளவில்லை. அதை மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் சென்று மண்டல் கமிஷன் என்பது மத்திய சர்க்கார் உத்தியோகங்களில் இதுவரை இல்லாத அளவிற்கு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உத்தியோகங்களைப் பெறுவதற்கான பெருமுயற்சி என்பதை